The Hindu (English)

Dated: 14-11-2024

# Voter turnout in Wayanad lower than in previous polls

**The lower percentage is attributed to a lack of enthusiasm among voters in areas dominated by LDF, says Opposition leader; Chelakkara records a turnout of 72.77% despite intense campaigning**

**The Hindu Bureau**
KALPETTA

Polling for the Wayanad Lok Sabha byelection passed off peacefully on Wednesday. According to preliminary reports, 64.24% of the voters cast their ballot in the constituency. In the previous election, the voting percentage was 72.92.

As many as 9,52,543 voters, including 4,97,788 women, of the total 14,71,742 voters cast their votes.

No untoward incident was reported in the district, Collector D.R. Meghashree said.

Good polling was reported in the landslides-affected region in Chooralmala and tribes-populated areas in the district. The district administration operated four KSRTC buses free of charge for the landslides survivors residing in rented apartments across the district. According to Leader of the Opposition and Congress leader V.D. Satheesan, the lower turnout is due to the lack of enthusiasm among voters in areas dominated by the LDF.



**Right to franchise:** Voters wait to cast their votes for the Wayanad Lok Sabha byelection on Wednesday. PTI

The bypoll was necessitated in the hill constituency after Congress leader Rahul Gandhi vacated it after he also won from the Rae Bareli constituency.

The Chelakkara Assembly constituency in Thrissur district recorded a voter turnout of 72.77% in the byelection. Despite intense campaigning, the turnout did not fully reflect the high energy of the electioneering.

Voting was delayed by half an hour in three booths due to malfunctioning of EVMs. Protests broke out when election officials removed posters. Both the LDF and the UDF claimed the Election Commission was biased in its actions.

The Hindu(English)

Dated: 14.11.2024

# Jharkhand records over 66% turnout; Wayanad sees 64.24%

**The Hindu Bureau**
NEW DELHI

The first phase of the Jharkhand Assembly election on Wednesday saw a voter turnout of 66.51% till 11.50 p.m., while the Wayanad Lok Sabha bypoll in Kerala recorded a polling percentage of 64.24.

Among the 31 Assembly seats where byelections were held, Gambegre in Meghalaya saw the highest turnout at 90.93%. Tarari in Bihar was the lowest at 50.2%.

In Jharkhand, 43 out of 81 constituencies voted in the first phase, while the rest will go to the polls on November 20. Votes will be counted on November 23.



JMM candidate Kalpana Soren leaving a polling booth in Ranchi on Wednesday. PTI

### Trinamool worker dies

A Trinamool Congress worker was shot dead near the Naihati constituency in West Bengal.

In Wayanad, Congress leader Priyanka Gandhi Vadra is pitted against Navya Haridas of the BJP and the CPI's Sathyan Mokeri. There were reports of breakdown of some electronic voting machines in a few booths there.

In Jharkhand, the 43 seats that went to the polls included 17 general seats, six reserved for the Scheduled Castes and 20 for the Scheduled Tribes.

CONTINUED ON
» PAGE 14

# Jharkhand records over 66% turnout

The fate of 683 candidates was sealed when 1.37 crore voters cast their votes in the first phase in Jharkhand. Interesting contests in this phase include the constituencies of Seraikella, Ranchi, Jamshedpur West, Jaganathpur and Jamshedpur East. Former Chief Minister and BJP candidate Champai Soren is contesting from Seraikella, while Jamshedpur East will see a face-off between the Congress's Ajoy Kumar, who once served as the Superintendent of Police of Jamshedpur, and Purnima Das Sahu, daughter-in-law of former Jharkhand Chief Minister and current Odisha Governor Raghubar Das.

Among the Assembly segments, Seraikella-kharsawan district topped the list with 76.02% polling. Ranchi recorded the lowest at 62.64%.

### IPS officer suspended

The Election Commission suspended a Rajasthan cadre IPS officer Kishan Sahay Meena for dereliction of duty. The official, posted in Jharkhand for electoral duty, has been charged with returning to Rajasthan without permission.

In the last Assembly polls in 2019, the Jharkhand Mukti Morcha secured 30 seats, the BJP won 25. The JMM-led alliance, with the Congress and RJD, won a majority of 47 seats.

Most of the Assembly seats where bypolls are being held fell vacant after the sitting MLAs contested the recent Lok Sabha elections and won.

### Trinamool worker killed

In West Bengal, the Chief Electoral Officer has sought a report on the killing of a Trinamool worker. The average voter turnout across six Assembly constituencies stood at 70.76%. The turnout in Taldangra was 75.2%, Haroa 76%, Medinipur 72.73%, Sitai 71.25%, Madarihat 65% and Naihati 64.38%.

In Rajasthan, the Khinwsar Assembly seat recorded the highest polling percentage of 75.62%, while in Madhya Pradesh, Vijaypur recorded 77.42%. In Bihar, Tarari saw a voter turnout of 50.2% while Imamganj saw a turnout of 51.38%.

Deccan Chronicle

Dated: 14.11.2024

# J'khand records 66.5% voting in first phase

DC CORRESPONDENT
*WITH AGENCIES INPUTS*
NEW DELHI, NOV. 13



People wait to cast their votes for the first phase of Jharkhand Assembly polls in West Singhbhum district on Wednesday. — *PTI*

With war cries echoing for tribal rights versus infiltrators and development versus corruption, Jharkhand's Assembly elections kicked off on Wednesday, registering a voter turnout of around 66.5 per cent across 43 seats out of 81 in the first phase. Alongside, voting also took place for byelections in 31 Assembly seats across 10 states and the Wayanad Lok Sabha seat in Kerala from where Congress leader Priyanka Gandhi is a candidate. Voting for the rest of the seats will go to polls on November 20.

With Jharkhand kicking off its polls, leaders across the political spectrum urged people to vote in large numbers. Prime Minister Narendra Modi, leader of the Opposition Rahul Gandhi, Union home minister Amit Shah and Jharkhand chief minister Hemant Soren urged people to come out in big numbers and exercise their franchise with "full enthusiasm".

"Today is the first round of voting in the Jharkhand Assembly elections. I urge all voters to vote with full enthusiasm in this festival of democracy. On this occasion, my heartiest congratulations to all my young friends who are going to vote for the first time! Remember — 'pehle matdan, phir jalpaan'!" Mr Modi said in a post on X. ■ P4

# J'khand records 66.5% voting in first phase

FROM PG 1

Despite threats from Naxals, voters came out in large numbers to vote. The Naxalites had put up posters and tried obstructing the way of voters but security forces successfully removed the posters and obstacles. By 11 am, 60% voting turnout was recorded at polling booth number 25 in Sonapi, Jagannathpur AC, West Singhbhum, Jharkhand.

The polling in all elections remained largely peaceful though an incident was reported in Rajasthan's Deoli-Uniara in Tonk where an independent candidate slapped an area magistrate. The incident occurred when independent candidate Naresh Meena, a Congress rebel, allegedly confronted sub-divisional officer Amit Chaudhary for making efforts for voting as the locals had boycotted polling in support of their demand. Bypolls took place for seven Assembly seats in Rajasthan on Wednesday.

Across the states, polling was largely peaceful, with only minor electronic voting machine (EVM) glitches in Wayanad and Chelakkara, which officials promptly addressed.

In Bihar, byelections took place for Tarari, Imamganj, Belaganj and Ramgarh Assembly seats while in Assam it was held in five Assembly seats.

Sporadic incidents of violence, including a shootout-cum-crude bomb attack in Bhatpara in North 24 Parganas district that killed a local TMC worker, marred the Bengal byelections, while the voter turnout across six constituencies stood at 69.29 per cent till 5 pm.

The Times of India, Dated: 14.11.2024

# 66.5% vote during first phase of J'khand polls; it was 63.7% in 2019

## Poor Turnout In Ranchi, Jamshedpur

Dhritiman.Ray@timesofindia.com

**Ranchi:** The overall voter turnout in the first phase of the Jharkhand assembly election on Wednesday, for 43 seats, was recorded at 66.5%, nearly three percentage points higher than the 63.7% for these seats in 2019.

Rural areas, mostly tribal belts in JMM's stronghold of Kolhan division, saw brisk voting since the morning, while urban apathy led to low turnouts across constituencies overlapping Ranchi and Jamshedpur as 1.37 crore voters cast their ballots.

At 79.1%, Kharsawan (ST seat) saw the highest turnout, while Ranchi recorded the lowest turnout, 52.3%. Jamshedpur East and West segments settled at 57% and 56.3%, respectively. "In Budha Pahad area in Garhwa district, once considered a stronghold of extremists, long queues, and peaceful polling at Hesatu Polling station signalled the deep penetration of democratic ethos ... this polling station was set up in Budha Pahad area for the Lok Sabha Elections 2024, allowing residents to vote in their own village," the Election Commission said on Wednesday.

Even as voters lined up outside booths, hectic campaigning for the second phase of the election for the 38 remaining seats, in the crucial JMM strongholds of tribal heartland Santhal Pargana and coal-rich Koylanchal, picked up pace. Prime Minister Narendra Modi addressed two election rallies in Deoghar and Godda, while chief minister Hemant Soren addressed rallies in Dhanbad and Hazaribagh districts.

The final phase of voting will be held on Nov 20.

Early in the day Odisha governor Raghubar Das voted in Jamshedpur (East), while CM Hemant Soren and his wife, Kalpana Soren, Rajya Sabha deputy chairman Harivansh Narayan Singh, former Indian cricketer Mahendra Singh Dhoni and other VIPs cast their votes in Ranchi. Former CM Champai Soren, who cast his vote in Seraikela (ST), said BJP would ride home on the issue of infiltration.

Voters defied bandh calls by Maoists in Jagannathpur (ST) and Manoharpur (ST) assembly segments and turned up in numbers to exercise their franchise.

*(With inputs from Abhijit Sen in Hazaribagh, Vishvendu Jaipuriar in Chatra, K A Gupta in Gumla and B Sridhar in Jamshedpur)*



Mahadeo Sen

**FAN FAVOURITE:** Former Indian skipper Mahendra Singh Dhoni and his wife Sakshi during the first phase of assembly election in Ranchi on Wednesday

### Cong wants to end reservation to win polls: PM

**Pakur/ Dumka:** Prime Minister Narendra Modi stepped up campaigning in Santhal Pargana for the second phase of the Jharkhand assembly election, calling upon voters to unite and bring BJP into govt if they valued their "*roti, beti, and maati* (employment, daughters, and land)", report **Jaideep Deogharia & Rajesh Kr Pandey.** Ahead of polling on Nov 2 for the remaining 38 assembly seats in Jharkhand, PM Modi addressed election rallies at the temple town of Deoghar and in adjacent Godda district, seeking support for NDA candidates contesting 18 seats in Santhal Pargana region. Targeting Congress leader Rahul Gandhi, Modi accused Congress of being against the reservation policy and hinted that the demand for a caste-based census is aimed at dividing people and ending reservation benefits enjoyed by them. Claiming Congress was anti-tribal and that its politicians demean tribal leaders, Modi cited the example of Sita Soren being abused by a Congress candidate. "This is the same party which put its entire might to defeat tribal daughter Droupadi Murmu in the presidential election when BJP nominated a tribal daughter for the highest office in the country. No wonder their leader insulted sister Sita Soren and even then JMM remained quiet," he said.

# 55-90% voter turnout in assembly bypolls, 65% in Wayanad

**Jaipur/Wayanad:** A turnout ranging from 55% to 90% was recorded in the bypolls to 31 assembly seats in 10 states while in the Wayanad Lok Sabha constituency, the polling percentage was around 65 on Wednesday with voting in West Bengal marred by sporadic incidents of violence in which a TMC worker was killed.

Voting was conducted in seven seats in Rajasthan, six in West Bengal, five in Assam, four seats in Bihar, three in Karnataka, two seats in Madhya Pradesh, and one seat each in Chhattisgarh, Gujarat, Kerala and Meghalaya besides Wayanad. Votes will be counted on November 23.

Most of these seats fell vacant after the sitting MLAs contested the Lok Sabha elections and won while in some constituencies, the bypolls are being held due to death of the representatives.

In Meghalaya, a high turnout of 90.84% was recorded in the lone Ganbegre seat in West Garo Hills district, chief electoral officer B D R Tiwari said. Former TMC ward president Ashok Shaw was killed in the shootout-cum-crude bomb attack in Bhatpara in North 24 Parganas in West Bengal, where the voter turnout was last reported to be 69.29%. A polling percentage of over 65 was recorded in the bypolls to the seven seats in Rajasthan – Jhunjhunu, Dausa, Deoli-Uniara, Khinvsar, Chorasi, Salumber and Ramgarh.

Wayanad Lok Sabha constituency in Kerala, from where Congress general secretary Priyanka Gandhi Vadra made her electoral debut, saw a voter turnout of around 65%. This was a decline from the close to 74% turnout recorded in the polls held in April, when her brother Rahul Gandhi contested from the hill constituency. PTI

The Hindu (Tamil)

Dated: 14-11-2024

# ஜார்க்கண்ட் முதல் கட்ட தேர்தலில் 65% வாக்குப்பதிவு

● ராஞ்சி

ஜார்க்கண்ட் மாநில சட்டப் பேரவைக்கான முதல் கட்ட தேர்தலில் 65% வாக்குகள் பதிவாகியுள்ளன.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள 81 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கு நவம்பர் 13, 20-ம் தேதிகளில் 2 கட்டமாக தேர்தலை நடத்த தலைமைத் தேர்தல் ஆணையம் முடிவு செய்தது. அதன்படி முதல்கட்டமாக 43 தொகுதிகளுக்கு நேற்று வாக்குப்பதிவு நடைபெற்றது. 43 தொகுதிகளில் மொத்தம் 683 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். முன்னாள் முதல்வர் சம்பாய் சோரன் மற்றும் முன்னாள் எம்.பி. கீதா கோரா உள்ளிட்டோர் களத்தில் உள்ளனர். இந்நிலையில் நேற்றுகாலை 7 மணிக்கு 43 தொகுதிகளிலும் வாக்குப்பதிவு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்றது.

ஜார்க்கண்ட் மாநில ஆளுநர் சந்தோஷ் குமார் கங்வார், ராஞ்சியில் உள்ள ஏடிஐ வாக்கு மையத்தில் வாக்களித்தார்.



ஜார்க்கண்ட் தலைநகர் ராஞ்சியிலுள்ள ஒரு வாக்குச்சாவடிக்கு வாக்களிக்க வந்த எம்.எஸ்.தோனி. படம்: பிடிஐ

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் எம்.எஸ். தோனி தனது மனைவி சாக்சியுடன் வந்து வாக்களித்தார். மாலை 5 மணிக்கு வாக்குப்பதிவு நிறைவடைந்தது. இதையடுத்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், விவிபாட் இயந்திரங்கள் சீல் வைக்கப்பட்டு போலீஸ் பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையத்துக்கு கொண்டு செல்லப்பட்டன.

மாலை 5 மணி நிலவரப்படி முதல் கட்டத்தேர்தலில் மொத்தம் 64.86 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது கடந்த 2019 தேர்தலை விட சற்று அதிகம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். 2019-ல் நடைபெற்ற பேரவைத் தேர்தலின்போது 63.9 சதவீத வாக்குகள் பதிவானது குறிப்பிடத்தக்கது.

இதைத் தொடர்ந்து 2-வது கட்டமாக மீதமுள்ள 38 பேரவைத் தொகுதிகளுக்கு வரும் 20-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. வாக்கு எண்ணிக்கை நவம்பர் 23-ம் தேதி நடைபெறவுள்ளது.

இந்தப் பேரவைத் தேர்தலில் ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஆளும் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா (ஜேஎம்எம்) தலைமையிலான இண்டியா கூட்டணிக்கும், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும் இடையே இருமுனைப் போட்டி நிலவுகிறது.

### வயநாடு இடைத்தேர்தல்

ஜார்க்கண்ட் முதல் கட்டத் தேர்தலுடன், கேரள மாநிலம் வயநாடு மக்களவைத் தொகுதிக்கும், நாடு முழுவதும் 10 மாநிலங்களில் உள்ள 31 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும் நேற்று இடைத்தேர்தல் நடைபெற்றது.

Daily Thanthi
Dated: 14.11.2024



ராஞ்சியில் உள்ள வாக்குச்சாவடி ஒன்றில் ஓட்டுப்போடுவதற்காக வாக்காளர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்த காட்சி.

# ஜார்கண்ட் முதல்கட்ட தேர்தலில் 66 சதவீத வாக்குப்பதிவு

## அமைதியாக நடந்து முடிந்தது

ராஞ்சி, நவ.14-

ஜார்கண்டில் நடந்த முதல்கட்ட சட்டசபை தேர்தலில் 66 சதவீத வாக்குகள் பதிவானது.



தனது மனைவி கல்பனாவுடன் ஓட்டுப்போட்ட முதல்-மந்திரி ஹேமந்த் சோரன், மை வைக்கப்பட்ட விரலை செய்தியாளர்களிடம் காட்டியபோது எடுத்த படம்.

### 2 கட்டங்களாக தேர்தல்

ஜார்கண்ட் சட்டசபையின் பதவிக்காலம் வருகிற ஜனவரி 5-ந் தேதியுடன் நிறைவடைகிறது. எனவே அங்கு 2 கட்டங்களாக சட்டசபை தேர்தல் நடத்தப்படும் என அக்டோபர் 15-ந் தேதி தேர்தல் கமிஷன் அறிவித்தது.

அதன்படி மொத்தமுள்ள 81 தொகுதிகளில் 43 இடங்களுக்கு நவம்பர் 13-ந் தேதியும் (நேற்று), 38 தொகுதிகளுக்கு 20-ந் தேதியும் வாக்குப்பதிவு நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

மத்தியில் ஆளும் பா.ஜனதா அல்லது அதன் கூட்டணி கட்சிகள் ஆளாத மாநிலங்களில் ஒன்றாக ஜார்கண்ட் உள்ளது. எனவே இந்த தேர்தலில் வெற்றி பெற்று ஜார்கண்டையும் தங்கள் ஆட்சிப்பட்டியலில் சேர்க்க அந்த கட்சி தீவிரம் காட்டுகிறது.

அதேநேரம் மாநிலத்தை ஆளும் ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா, காங்கிரஸ், ராஷ்டிரீய ஜனதாதளம் இணைந்த இந்தியா கூட்டணியும், மாநிலத்தில் ஆட்சியை தக்கவைக்க தீவிர களப்பணி ஆற்றிவருகிறது.

### சூறாவளி பிரசாரம்

இதனால் மாநிலத்தில் தேர்தல் களம் அனல் பறக்கிறது. கடந்த 5 ஆண்டுகளில் நிறைவேற்றிய வளர்ச்சித்திட்டங்களை பட்டியலிட்டு பிரசாரம் மேற்கொண்டு வரும் முதல்-மந்திரி ஹேமந்த் சோரன், இந்த திட்டங்களை தொடர தனக்கு வாக்களிக்குமாறு வாக்காளர்களை கேட்டுக்கொண்டு வருகிறார்.

அவருக்கு உறுதுணையாக இந்தியா கூட்டணி தலைவர்களும் களத்தில் சூறாவளி பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக காங்கிரஸ் தலைவர் கார்கே, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோரும் மாநிலத்தில் ஏராளமான கூட்டங்களில் பங்கேற்று வாக்கு சேகரித்து வருகின்றனர்.

அதேநேரம் பா.ஜனதா சார்பில் பிரதமர் மோடி, அமித்ஷா, ஜே.பி.நட்டா, ராஜ்நாத் சிங் உள்ளிட்ட மத்திய மந்திரிகள் மற்றும் பல்வேறு மாநில பா.ஜனதா முதல்-மந்திரிகள் என பெரும் படையே மாநிலத்தில் முகாமிட்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு உள்ளனர்.

ஆளும் கூட்டணி அரசின் ஊழல்கள் மற்றும் மாநிலத்தில் பெரும் தலைவலியாக இருக்கும் ஊடுருவல் பிரச்சினையையும் சுட்டிக்காட்டி மாநில அரசை குற்றம் சாட்டி வருகின்றனர்.

### 43 தொகுதிகள்

இவ்வாறு அனல் பறந்து வரும் பிரசாரங்களுக்கு மத்தியில் முதல்கட்ட தேர்தல் நடைபெறும் 43 தொகுதிகளில் வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகளை தேர்தல் கமிஷன் தீவிரமாக மேற்கொண்டு வந்தது.

பல்வேறு மாவட்டங்களுக்கு உட்பட்ட இந்த 43 தொகுதிகளில் 17 இடங்கள் பொது தொகுதிகள் ஆகும். மேலும் பழங்குடியினர் 20, தலித் 6 என மீதமுள்ள 26 தொகுதிகளும் தனித்தொகுதிகள் ஆகும்.

முன்னாள் முதல்-மந்திரி சம்பாய் சோரன், முன்னாள் எம்.பி. கீதா கோரா உள்பட 683 வேட்பாளர்கள் முதல்கட்ட தேர்தலில் களமிறங்கி இருந்தனர். இதில் 73 பெண்கள், 1 திருநங்கையும் அடங்குவர்.

இவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் வாக்காளர் எண்ணிக்கை 1.37 கோடி என அறிவிக்கப்பட்டு இருந்தது. இவர்கள் வாக்களிப்பதற்காக 15,344 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு இருந்தன.

### விறுவிறுப்பான வாக்குப்பதிவு

இந்த வாக்குச்சாவடிகளில் நேற்று காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் நீண்ட வரிசையில் நின்று ஓட்டுப்போட்டனர்.

சில இடங்களில் காலையில் மந்தமாக காணப்பட்ட வாக்குப்பதிவு, நேரம் செல்லசெல்ல வேகமெடுத்தது. இதனால் அனைத்து தொகுதிகளிலும் விறுவிறுப்பான வாக்குப்பதிவு காணப்பட்டது. மாலை 5 மணிக்கு வாக்குப்பதிவு நிறைவடைந்தது. அப்போது 66.18 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்ததாக தேர்தல் கமிஷன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாநில கவர்னர் சந்தோஷ் குமார் கங்வார் தலைநகர் ராஞ்சியில் உள்ள வாக்குச்சாவடி ஒன்றில் ஓட்டுப்போட்டார். ராஞ்சி மாவட்டத்தில் உள்ள மற்றொரு வாக்குச்சாவடியில் முதல்-மந்திரி ஹேமந்த் சோரன் தனது மனைவி கல்பனா சோரனுடன் வாக்களித்தார்.

### அமைதியாக நடந்தது

ஜார்கண்டில் நேற்று நடந்த முதல்கட்ட தேர்தல் அமைதியாக நடந்தது. அதேநேரம் தேர்தலுக்காக வரலாறு காணாத பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. மாநில போலீசாருடன் இணைந்து துணை ராணுவப்படையினரும் பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

ஜார்கண்ட் மாநிலம் மாவோயிஸ்டுகள் ஆதிக்கம் நிறைந்த மாநிலங்களில் ஒன்றாக இருக்கும் நிலையில், இந்த தேர்தலை புறக்கணிக்குமாறு மக்களுக்கு மாவோயிஸ்டுகள் மிரட்டல் விடுத்திருந்தனர்.

வாக்குச்சாவடிகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இது தொடர்பான துண்டு பிரசுரங்களையும், வெடிகுண்டு போன்ற மர்ம பொருட்களையும் அவர்கள் வைத்து எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

### 23-ந் தேதி வாக்கு எண்ணிக்கை

ஆனாலும் அந்த பகுதிகளிலும் மக்கள் அதிக அளவில் திரண்டு வந்து வாக்களித்தனர். இதன் மூலம் எந்தவித இடையூறும் இன்றி முதல்கட்ட தேர்தல் நடந்து முடிந்தது.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் டோனி ராஞ்சியில் உள்ள வாக்குச்சாவடி ஒன்றில் ஓட்டு போட்டார்.

மாநிலத்தில் மீதமுள்ள 38 தொகுதிகளுக்கு வருகிற 20-ந் தேதி வாக்குப்பதிவு நடக்கிறது.

அதைத்தொடர்ந்து 81 தொகுதிகளிலும் பதிவான வாக்குகள் வருகிற 23-ந் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன.

Daily Thanthi

Dated: 14.11.2024



சேலக்கராவில் உள்ள ஒரு வாக்குச்சாவடியில் வாக்காளர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்ததை படத்தில் காணலாம்.

அமைதியான முறையில் இடைத்தேர்தல்

# வயநாடு தொகுதியில் 65 சதவீதம் வாக்குப்பதிவு

## வாக்குச்சாவடிகளை பிரியங்கா பார்வையிட்டார்

வயநாடு, நவ.14-

வயநாடு தொகுதியில் 65 சதவீதம் வாக்குகள் பதிவானது. தேர்தலின் போது வாக்குச்சாவடிகளை பிரியங்கா பார்வையிட்டார்.



வயநாடு நாடாளுமன்ற தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் பிரியங்கா, திருவம்பாடியில் உள்ள வாக்குச்சாவடியை பார்வையிட வந்தபோது எடுத்தபடம்.

### வயநாடு இடைத்தேர்தல்

கேரளாவில் வயநாடு நாடாளுமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தல் நேற்று நடைபெற்றது. வயநாடு தொகுதியில் காங்கிரஸ் சார்பில் பிரியங்கா, இடது முன்னணி சார்பில் சத்யன் மொகேரி, பா.ஜனதா சார்பில் நவ்யா அரிதாஸ் உள்பட 16 பேர் போட்டியிடுகின்றனர்.

வயநாடு நாடாளுமன்ற தொகுதியில் 14 லட்சத்து 71 ஆயிரத்து 742 வாக்காளர்கள் உள்ளனர். இடைத்தேர்தலையொட்டி 1,354 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு இருந்தது. நேற்று காலை காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. காலைமுதலே வாக்காளர்கள் தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்ற வாக்குச்சாவடிகளுக்கு வர தொடங்கினர்.

### துணை ராணுவம் பாதுகாப்பு

வயநாடு நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட மானந்தவாடி, சுல்தான்பத்தேரி, கல்பெட்டா, கோழிக்கோடு திருவம்பாடி, எரநாடு, நிலம்பூர், வாண்டூர் ஆகிய 7 சட்டமன்ற தொகுதிகளில் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது. இடைத்தேர்தலையொட்டி வயநாடு மாவட்டத்தில் நேற்று பொது விடுமுறை விடப்பட்டு இருந்தது.

பாதுகாப்பு பணிக்காக வயநாடு தொகுதியில் 3 ஆயிரம் போலீசார் குவிக்கப்பட்டு இருந்தனர். பதற்றமான 11 வாக்குச்சாவடிகளில் துணை ராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

### அரசு பஸ்கள் இயக்கம்

வயநாட்டில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட மேப்பாடி, சூரல்மலை, முண்டக்கை பகுதி மக்கள் வாக்களிக்கும் வகையில் கேரள அரசு சார்பில் கட்டணமின்றி 4 வழித்தடங்களில் அரசு பஸ்கள் இயக்கப்பட்டன.

இருப்பினும், நிலச்சரிவு பாதித்த பகுதிகளில் குறைவான வாக்காளர்களே வாக்குப்பதிவு செய்தனர்.

### வாய்ப்பு வழங்குவார்கள்

இதற்கிடையே வயநாட்டில் உள்ள வாக்குச்சாவடிகளுக்கு பிரியங்கா நேரில் சென்று, வாக்குப்பதிவு நடைபெறுவதை பார்வையிட்டார். அங்கு அவரை பெண்கள் ஆரத்தழுவி வரவேற்றனர்.

அதன் பின்னர் பிரியங்கா நிருபர்களிடம் கூறுகையில், வயநாடு மக்கள் என் மீது அன்பையும், பாசத்தையும் பொழிகிறார்கள். அவர்களுக்காக, அவர்களின் பிரதிநிதியாக இருப்பதற்கான வாய்ப்பை அவர்கள் எனக்கு வழங்குவார்கள் என்றார்.

### 23-ந்தேதி வாக்கு எண்ணிக்கை

இதேபோல் திருச்சூர் மாவட்டம் சேலக்கரா சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் நடைபெற்றது.

வயநாடு நாடாளுமன்ற தொகுதி மற்றும் சேலக்கரா சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் 65 சதவீதம் வாக்குகள் பதிவானது. இங்கு பதிவான வாக்குகள் வருகிற 23-ந்தேதி எண்ணப்படுகிறது. பாலக்காடு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகிற 20-ந்தேதி நடக்கிறது.

Daily Thanthi

Dated: 14-11-2024

10 மாநிலங்களில் காலியாக உள்ள

# 31 சட்டசபை தொகுதிகளில் இடைத்தேர்தல் விறுவிறுப்பான வாக்குப்பதிவு

## மே.வங்காளத்தில் மம்தா கட்சி தொண்டர் கொலை

புதுடெல்லி, நவ.14-

நாடுமுழுவதும் 10 மாநிலங்களில் காலியாக உள்ள 31 சட்டசபை தொகுதிகளில் இடைத்தேர்தல் நடைபெற்றது. மேற்குவங்காளத்தில் நடந்த வன்முறையில், மம்தா கட்சி தொண்டர் நாட்டுவெடிகுண்டு வீசி கொல்லப்பட்டார்.

### 31 தொகுதிகளில் இடைத்தேர்தல்

ஜார்கண்ட், மராட்டிய மாநில சட்டசபைகளுக்கு தேர்தல் நடைபெறுகிறது. இதனுடன் நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் காலியாக உள்ள சட்டசபை மற்றும் நாடாளுமன்ற தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது.

இதில் ஜார்கண்ட் மாநில சட்டசபைக்கு 13, 20-ந்தேதிகள் என இரண்டு கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்தது. அதன்படி அந்த மாநிலத்தில் உள்ள 81 சட்டசபை தொகுதிகளில் 43 தொகுதிகளுக்கு நேற்று முதல் கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது.

அதேபோல் ராஜஸ்தான், பீகார், மேற்குவங்காளம், கர்நாடகம், அசாம், மத்தியபிரதேசம், சத்தீஷ்கார், குஜராத் உள்பட 10 மாநிலங்களில் காலியாக உள்ள 31 சட்டசபை தொகுதிகளுக்கு நேற்று இடைத்தேர்தல் நடைபெற்றது. கர்நாடக மாநிலம் சென்னப்பட்டனா தொகுதியில் மத்திய மந்திரி குமாரசாமியின் மகன் நிகில் குமாரசாமி போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

### மேற்குவங்காளத்தில் கொலை

பலமாநிலங்களில் இடைத்தேர்தல் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடந்தது. பெரும்பாலான தொகுதிகளில் பெரிய அசம்பாவித சம்பவங்கள் ஏதுமின்றி நடந்து முடிந்தது.

ஆனால் மேற்குவங்காள மாநிலம் நைஹாட்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலின்போது, பட்பாரா பகுதியில் நாட்டு வெடிகுண்டு தாக்குதல் உள்பட ஆங்காங்கே வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றன. இரு தரப்பினருக்கு இடையே நடந்த மோதலில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த தொண்டரான அசோக் ஷா என்பவர் நாட்டு வெடிகுண்டு வீசி கொலை செய்யப்பட்டார்.

இந்த மோதல் சம்பவங்கள் தொடர்பாக தலைமை தேர்தல் கமிஷன் விளக்கம் கேட்டுள்ளது.

மேற்குவங்காளத்தில் இடைத்தேர்தல் நடைபெற்ற 6 தொகுதிகளிலும் மாலை 5 மணி நிலவரப்படி 69.29 சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் கமிஷன் தெரிவித்துள்ளது.

Dinamalar

Dated: 14-11-2024

# ஜார்க்கண்ட் முதற்கட்ட தேர்தல் 65 சதவீத ஓட்டுப்பதிவு

ராஞ்சி, நவ. 14–

ஜார்க்கண்டில், 43 சட்டசபை தொகுதிகளுக்கு நேற்று நடந்த முதற்கட்ட தேர்தலில், 65 சதவீத ஓட்டுகள் பதிவாகின.

ஜார்க்கண்டில், முதல்வர் ஹேமந்த் சோரன் தலைமையில் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா – காங்., கூட்டணி ஆட்சி நடக்கிறது. மொத்தமுள்ள 81 சட்டசபை தொகுதிகளுக்கு இரு கட்டங்களாக தேர்தல் நடக்கிறது.

நேற்று, 43 தொகுதிகளில் ஓட்டுப்பதிவு நடந்த நிலையில், மீதமுள்ள 38 தொகுதிகளில், வரும் 20ல் தேர்தல் நடக்கிறது; 23ல் ஓட்டு எண்ணிக்கை நடக்கிறது.

இந்த தேர்தலில், ஆளும் கூட்டணிக்கும், பா.ஜ., கூட்டணிக்கும் இடையே பலத்த போட்டி நிலவுகிறது.

இந்நிலையில், ராஞ்சி, கோடெர்மா, ஹசாரிபாக், ராம்கர், சத்ரா, கிழக்கு சிங்பும், செரைகேலா கார்சவான், குந்தி, கும்லா, சிம்கேடா, லோஹர்டகா, லதேஹர் உள்ளிட்ட மாவட்டங்களில், 43 தொகுதிகளில், நேற்று முதற்கட்ட ஓட்டுப்பதிவு நடந்தது.

காலை 7:00 மணிக்கு துவங்கிய ஓட்டுப்பதிவு, மாலை 6:00 மணிக்கு நிறைவடைந்தது. ஒருசில இடங்களில் வாக்காளர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்ததால், மாலை 6:00 மணியை தாண்டியும் ஓட்டுப்பதிவு நடந்தது.

முதற்கட்ட தேர்தலில், மாலை 5:00 மணி நிலவரப்படி, 64.86 சதவீத ஓட்டுகள் பதிவானதாக தேர்தல் கமிஷன் தெரிவித்தது. அதிகபட்சமாக, லோஹர்டகா மாவட்டத்தில், 73.21 சதவீத ஓட்டுகளும், குறைந்தபட்சமாக, ஹசாரிபாக் மாவட்டத்தில், 59.13 சதவீத ஓட்டுகளும் பதிவாகின.

ஒருசில இடங்களில் மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்களில் கோளாறு ஏற்பட்டதாக புகார்கள் வந்தன.

பெரும்பாலும் எந்தவித அசம்பாவிதமுமின்றி அமைதியாக ஓட்டுப்பதிவு நடந்ததாக தேர்தல் கமிஷன் அதிகாரிகள் தெரிவித்தன.

காங்., பொதுச்செயலரும், லோக்சபா எதிர்க்கட்சி தலைவர் ராகுலின் சகோதரியுமான பிரியங்கா போட்டியிடும் வயநாடு லோக்சபா தொகுதிக்கும் நேற்று இடைத்தேர்தல் நடந்தது.

மாலை 6:00 மணி நிலவரப்படி, இந்த தொகுதியில், 64.69 சதவீத ஓட்டுப்பதிவு பதிவானது. கடந்த ஏப்ரலில் நடந்த லோக்சபா தேர்தலில், வயநாடு தொகுதியில், 74 சதவீத ஓட்டுகள் பதிவானது குறிப்பிடத்தக்கது.

இதேபோல், ராஜஸ்தான், மேற்கு வங்கம், அசாம், பீஹார், கர்நாடகா, ம.பி., – சத்தீஸ்கர், குஜராத், கேரளா, மேகாலயா ஆகிய மாநிலங்களில், காலியாக உள்ள 31 சட்டசபை தொகுதிகளுக்கும் நேற்று இடைத்தேர்தல் நடந்தது.

## தேர்தல் கமிஷனில் பா.ஜ., புகார்

தேர்தலுக்கு முந்தைய, 48 மணி நேரத்தில் யாரும் பிரசாரத்தில் ஈடுபடக்கூடாது என்பது விதி. ஆனால், ஆளும் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ் தேர்தல் விதிமீறலில் ஈடுபட்டதாக பா.ஜ., குற்றஞ்சாட்டி உள்ளது.

ஜார்க்கண்டில், நேற்று முன்தினம் பிரசாரம் ஓய்ந்த நிலையில் காங்கிரஸ் தேர்தல் அறிக்கையை வெளியிட்டதாகவும், அதில் 250 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கப்படும் என்றும், ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும், சச்சார் கமிட்டி அறிக்கை பரிந்துரைகளின் அடிப்படையில் சிறுபான்மையினருக்கு மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பது உள்ளிட்ட முக்கிய வாக்குறுதிகள் இடம்பெற்றிருந்ததாகவும் பா.ஜ., குற்றஞ்சாட்டி உள்ளது.

இது தொடர்பாக பா.ஜ., தேசிய செய்தித் தொடர்பாளர் சம்பித் பத்ரா எம்.பி., நேற்று கூறியதாவது:

தேர்தலுக்கு முந்தைய 48 மணி நேரத்தில் பிரசாரம் செய்யவோ, தேர்தல் அறிக்கை வெளியிடவோ கூடாது என்ற நிலையில் காங்கிரஸ் தேர்தல் அறிக்கையை வெளியிட்டது தேர்தல் நடத்தை விதிமீறல். காங்.,தலைவர் ராகுல் ஒரு போதும் அரசியல் சட்டத்தை மதிப்பதில்லை. எனவே காங்கிரஸ் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தேர்தல் கமிஷனில் புகார் அளித்துள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.